# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்:26/பேரூ/2024**
**நாள் : 10.12 .2025**

V. சிவகாமிநாதன்,
சக்கம்பட்டி,
தேனி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சி,
தேனி மாவட்டம். – எதிர் மனுதாரர்

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், சக்கம்பட்டி, சிலம்பு மகால் தெரு என்ற முகவரியை சேர்ந்த திரு. V. சிவகாமிநாதன் என்பவரது 22.06.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.06.2024 அன்று பெறப்பட்டு, 26/பேரூ/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், சக்கம்பட்டி, சிலம்பு மகால் தெரு என்ற முகவரியை சேர்ந்த திரு. V. சிவகாமிநாதன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அளித்துள்ள தனது 22.06.2024 நாளிட்ட புகார் மனு மற்றும் ஆவணங்களில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வால் வழக்கு எண். W.P.(MD) No. 900 of 2023ல் 14.02.2023 நாளிட்ட ஆணையை அமல்படுத்துவதற்கு தேனி மாவட்டம், ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சியால் மேற்கொண்ட நடவடிக்கை குறித்தான ஆவணங்களை 1872 இந்திய சாட்சிய சட்ட பிரிவு 76ன் கீழ் சான்று ஆவணங்கள் கேட்டு ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் மனு செய்து இருந்தேன். இந்த மனுக்களை எல்லாம் வெறும் காகிதமாக நினைத்துக் கொண்டு பதில் தராமல் இந்திய சாட்சிய சட்டத்தையே அவமதிப்பு செய்து வரும் ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்து தண்டனையும் வழங்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்". என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் கோரிக்கை குறித்து 23.10.2025 நாளிட்ட அறிக்கையை ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து பெறப்பட்டு, மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்

ஆகியோர்களை 29.10.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணை மேற்கொண்டு, வாக்குமூலங்கள் பெறப்பட்டன.

(3) மனுதாரரின் முறையீட்டு மனு, பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலங்கள் ஆகியவை ஆவணங்களுடன் பரிசீலனை செய்யப்பட்டதில் இப்பொருள் தொடர்பாக 2022-ஆம் ஆண்டு அப்போதைய முறைமன்ற நடுவர் அவர்களால் ஆணை எண். 02/பேரூ./2022 நாள் 16.07.2022-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதற்கிடையில் இது குறித்து திருமதி. ஆதித்யலட்சுமி என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தொடரப்பட்ட வழக்கில் (W.P. (MD) No. 900 of 2023), 14.02.2023 நாளிட்ட மாண்பமை உயர்நீதி மன்ற ஆணையில் மனுதாரரின் 19.09.2022 நாளிட்ட மனுவை இம்முறைமன்ற நடுவத்தால் வெளியிடப்பட்ட ஆணையினை கருத்திற்கொண்டு 4 வார காலத்திற்குள் தீர்வு செய்திட ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ள நிலையில், இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ள மனுதாரரரின் புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்றம் நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. V. சிவகாமிநாதன்,
சிலம்பு மகால் தெரு, சக்கம்பட்டி,
ஆண்டிபட்டி வட்டம், தேனி மாவட்டம் - 625 512.

2) செயல் அலுவலர்,
ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சி,
தேனி மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம், இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

__நகல்__

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

11/12/25
செயலாளர்
11/12/25

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை 600 032